# நம் நாடு எதிர்நோக்கிய பிரச்சனைகளும் அவற்றை வெற்றி கொண்ட திறமையும்

**“அச்சம் என்பது மடமையடா;**
**அஞ்சாமை திராவிடர் உடமையடா”**

திராவிடர்களுக்கு மட்டுமல்ல அஞ்சாமை என்பது சிங்கப்பூரர்களுக்கும் உரிய ஒன்றே. கவிஞர் ஒருவர் எழுதிவைத்த வரிகளான இவை நம்முடைய தாயகமான சிங்கைக்குப் பொருத்தமான ஒன்றே! சிங்கப்பூரர்களாகிய நம்முடைய முன்னோர் பல ஆண்டுகளுக்கு முன், வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்வதற்காக, தாயகத்தைவிட்டுப் பிரிந்து, உறவுகளைப் பிரிந்து கடல் கடந்து வந்தவர்கள். ‘‘நல்வாழ்வு நிச்சயம் அமையும்’’ என்ற நம்பிக்கையில் சொந்த மண்ணைவிட்டு, துணிச்சலுடன் வந்தவர்களா தோல்வியைக் கண்டு பயப்பட்டனர்? அவர்களின் சந்ததியினரான நாம்தான் பயப்படுகிறோமா? நிச்சயம் இல்லை! புலிக்குப் பிறந்தது என்றும் பூனை ஆகாது. சிங்கை, சிம்ம நகரம்; ஆசியப்புலி. ஆகவே, சிங்கப்பூரர்களும் பாயப் பிறந்தவர்களே தவிர, பயப்படப் பிறந்தவர்கள் அல்லர். இன்று கம்பீரத்துடன் தோற்றமளிக்கும் சிங்கை ஒரு காலத்தில் எவ்வாறு இருந்தது என்பதனைச் சற்றே நம் மனத்திரையில் மறு ஒளிபரப்பு செய்து பார்ப்போம்.

“பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்“ என்று நம் தெய்வப்புலவர், ஒரு நாடு அடைய வேண்டிய ஐந்து செல்வங்களைப் பற்றித் தமது குறளொன்றில் கூறியுள்ளார். இவற்றில், சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு செல்வம், விளைவின்பம், ஏமம் ஆகியவற்றைச் சிங்கை முற்றிலுமாய் இழந்திருந்தது. கனிம வளங்கள், நீர் ஆதாரங்கள், மலைகள், வயல்வெளிகள் என்று இயற்கை அன்னை வழங்கிய வளங்களைப் பெற்று, பல நாடுகள் எல்லாவிதத்திலும் நம்மைவிட முன்னணியில் இருந்தன. மக்கள் வளம் ஒன்றை மட்டுமே கொண்டு, அனுபவமின்றி, ஆதரவின்றி நம் நாடு இவ்வுலகில் தோற்றம் கண்டது. ஆனால், இத்தகைய நிலையில் ‘இயற்கை வளங்கூட இல்லாத நிலையில் நம்மால் எப்படி வாழ இயலும்’ என்று அஞ்சி நம் முன்னோர்கள் நம்பிக்கை இழந்தார்களா? இல்லையே! வேற்றுமையிலும் ஒற்றுமை கண்டு உழைப்பதற்குப் பெயர், தோல்வியினை நினைத்துப் பயப்படுவதாகுமா? குறிப்பிட்டுக் கூறவேண்டுமானால், பிரதம அமைச்சராகவும் மதியுரை அமைச்சராகவும் திகழ்ந்து வழிகாட்டிய திரு. லீ குவான் யூ அவர்கள் அன்று துவண்டுவிடாது உழைத்தால்தான் சிங்கை இன்றைய வளர்ச்சியை எட்டிப்பிடித்துள்ளது. சோதனையிலும் சாதனைகளைக் கண்ட இவரைப்போன்ற சிங்கப்பூரர்களா தோல்விகளைக் கண்டு பயப்படுபவர்கள்?

### “சூது விரும்பேல்”

ஔவையின் அமுத மொழி இது! ஆனால், இன்றைய நடைமுறை வாழ்க்கை, தீமையிலும் நன்மை அடங்கியுள்ளது என்பதனை நிரூபித்துள்ளது. ஆம்! சூதாட்ட மையம் என்ற புதிய திட்டத்தை அரசு அமலப்படுத்தியுள்ளது. இதனால், ஏற்படக்கூடிய

விளைவுகளில் நன்மைகள், தீமைகள் என இரண்டுமே அடங்கியுள்ளன. பொருளியல் வளர்ச்சி, சூதாட்ட மையத்தால் நம்நாடு அடையப்போகும் நன்மையாகும். சிங்கப்பூரர் களின் இயல்பான வாழ்க்கை முறையும் பழக்கவழக்கங்களும் சூதாட்ட மையத்தின் தோற்றத்தால் பாதிப்படையக்கூடிய வாய்ப்புள்ளது. ஆனால், மக்கள் பாதிப்படைந்தால் இத்திட்டம் தோல்வியுறும் என்று நினைத்து நம் அரசு பின்வாங்கியதா? இல்லவே இல்லை! நாட்டு மக்களின் நலனில் அக்கறைகொண்டு பொதுமக்கள் பாதிக்கப்படாமலிருப்பதற்குத் தகுந்த நடவடிக்கைகளை நம்முடைய அரசாங்கம் எடுத்து வருகிறது. 'ஆழம் அறியாமல் காலை விடக்கூடாது' என்பது உண்மைதான். ஆனால், சவால்களிலிருந்துதானே சாதனைகள் பிறக்கின்றன.

**"உறுபசியும் ஒவாப் பிணியும் செறுபகையும்**

**சேரா திருப்பதே நாடு"**

வள்ளுவர் குறிப்பிட்ட பசி, பகை, பிணி ஆகியவற்றுள் பிணி என்பது நம் நாட்டை தாக்கிய ஒன்று 'சார்ஸ்', பறவைக்காய்ச்சல், கை கால் வாய்ப்புண் என அவ்வப்போது பல நோய்கள் நமது தேசத்திற்குள் நுழைந்து இயல்பான வாழ்க்கையை பாதிப்படையச் செய்தன. ''நோய் பரவுகிறதே'' என்று புலம்பியபடி அரசு வேடிக்கை பார்த்ததா? அல்லது ''நம்மால் ஒன்றும் செய்ய முடியாது'' என்று ஓடி ஒளிந்ததா? மேற்குறிப்பிட்ட நோய்கள் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடியவை. இவை அதிக அளவில் பரவினால், பாதிக்கப்பட்ட நாட்டின் பொருளியல் வளர்ச்சி தடைப்படக்கூடும். ஆனால், இவற்றுக்கெல்லாம் சிங்கப்பூரர்கள் அஞ்சாமல் அரசாங்கத்திற்கு ஆதரவு அளித்தனர் அல்லவா? அச்சம் நம்மைக் கட்டிப்போட்டிருந்தால், நம் அரசு விறுவிறு என்று பாதுகாப்புத் திட்டங்களை அமல்படுத்தியிருக்குமா? அல்லது நோய்தான் வந்த வேகத்தில் பறந்திருக்குமா?

**"எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை**
**அதிர வருவதோர் நோய்"**

நோய் மட்டுமல்ல ஒரு காலக்கட்டத்தில் பொருளியல் மந்த நிலையும் கூட நம் சிங்கையை ஆட்டம் காண வைத்தது. அப்பொழுது பல ஊழியர்கள் வேலைகளை இழக்க நேரிட்டது. ஊதியங்கள் குறைவாக வழங்கப்பட்டன. அரசாங்கம் ஒரு சில பண உதவித் திட்டங்களை ரத்து செய்ய வேண்டியதாயிற்று. இவையெல்லாம் சிங்கப்பூரர்களின் வாழ்க்கை முறையை மாற்றி அமைத்தன. பல குடும்பங்கள் பண நெருக்கடிக்குள்ளாயின. ஆனால், வள்ளுவர் கூறியது போல முன்கூட்டியே இவை போன்ற அசம்பாவிதங்கள் தலை தூக்கும் என்பதனை நாம் அறிந்ததனால்தான், அரசினால் அவசர காலத் திட்டங்களை அமல்படுத்த முடிந்தது. சிங்கப்பூர் அச்சிக்கலான காலகட்டத்தை வெற்றிகரமாகக் கையாண்டது என்பதற்கு, நம் பொருளியல் நிலை இரண்டே ஆண்டுகளில் மீட்படைந்து வளர்ச்சி கண்டதே தக்க சான்றாகும்; இது, சிங்கப்பூரர்களின் தைரியத்திற்கும் அரசின் நம்பிக்கைக்கும் கிடைத்த வெற்றியாகும்!

இதுவரை எனது தாய்நாட்டில் பிறந்தவர்கள் தோல்வியைக் கண்டு அஞ்சாதவர்கள் என்பதற்குச் சான்றாக, சிங்கை கடந்த வந்த கரடுமுரடான பாதையினைப் பற்றி

விளக்கியுள்ளேன். தைரியமும் தெளிவான நோக்கமுமே நம்மை, சுதந்திரம் பெற்ற சுமார் நாற்பது ஆண்டுகளில் பிறநாடுகள் மெச்சும் அளவிற்கும் உயர்த்தியுள்ளது.

பலமுறை நம் சிங்கை நாடு சோதனைகளை எதிர்கொண்டாலும் சவால்களைக் கண்டோமே தவிர நாம் அவற்றை நினைத்து அஞ்சியதில்லை. இது, நமது பிரதமர் திரு.லீ. சியான் லுங் அவர்கள் தன்னுடைய உரை ஒன்றில் குறப்பிட்டது. ஆகவே, பாயப்பிறந்த இந்நாடு என்றும் வெற்றியை மட்டும் நோக்கில்கொண்டு பாயும் என்பதனைக் குறிப்பிடலாம்.

**தி. கஸ்தூரி**
**உயர்நிலை 4 உயர்தமிழ்**
**தஞ்சோங் காத்தோங் பெண்கள் பள்ளி**